**முதன்மை மாவட்ட நீதிமன்றம், புதுக்கோட்டை**

அ.வ.எண்.12 /2023

பிரதிவாதி தரப்பு 1வது சாட்சி சிதம்பரம் என்பவரின் வாக்குமூலம் இந்திய சாட்சிய சட்டத்தின்படி திருமதி. கங்காலெட்சுமி, கிரேடு-1 பெஞ்ச் க்ளார்க் என்பவரால் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. சிதம்பரம் | வயது | : | 60/2026 |
| தகப்பனார் பெயர் | : | கருப்பன் | தாலுகா | : | திருமயம் |
| கிராமம் | : | ஆனைவாரி | தொழில் | : | விவசாயம் |

நாள்-08.04.2026

பி.வா.சா.1

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) வாதி எனக்கு நன்கு பழக்கம். எனது மனைவி கே.செட்டிப்பட்டி ஊராட்சி மன்ற தேர்தலில் 2019ம் ஆண்டு போட்டியிட்டார் என்றால் ஆமாம்.

2) அந்த ஊராட்சியில் மொத்தம் 1228 வாக்காளர்கள் உள்ளனர். அந்த தேர்தலில் எனது மனைவி வெற்றிபெற்றார்.

3) தேர்தல் என்றாலே பெரும் செலவு வரும் என்றால் சரிதான்.

4) மேற்படி தேர்தலில் வாதியோ, வாதியின் மனைவியோ போட்டியிடவில்லை என்றால் சரிதான்.

5) 2019ம் ஆண்டு தேர்தல் டிசம்பர் மாதம் 30ம் தேதி நடைபெற்றது என்றால் சரிதான்.

6) வாதி நான் ரூ.10,00,000/- கடன் பெற்றதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

7) நான் வாதியிடம் ரூ.3,10,000/- கடன் பெற்றதாகவும், அதை வாதிக்கு மீண்டும் திரும்ப செலுத்திவிட்டதாகவும் கட்சி செய்கிறேன் என்றால் சரிதான்.

8) நான் வாதியிடம் பணத்தை திரும்ப செலுத்தியதாக சொல்வதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் பி.வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்துள்ளேன்.

9) பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் வாதியின் கையெழுத்தோ, வாதியின் மனைவியின் கையெழுத்தோ இல்லை என்றால் உள்ளது.

10) பி.வா.சா.ஆ.1 ல் உள்ள நான் சொல்லும் கையெழுத்து வாதியின் கையெழுத்து இல்லை என்றாலும், பி.வாசா.ஆ.1 ஆவணம் என்னால் வழக்கிற்காக போர் ஜரியாக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல,

11) பி.வாசா.ஆ.1- ஐ போல் எந்த ஆவணமும் எனக்கு வாதி எழுதி தரவில்லை என்றால் சரியல்ல.

மு.மா.நீ.,

12) வாதி சிறிது காலம் வெளிநாட்டில் வேலை பார்த்தார் என்றால் சரிதான். வாதி வசதி வாய்ப்பாக உள்ளார் என்றால் சுமாராக உள்ளார்.

13) வாதியின் மைத்துனர் சோலை மளிகை கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். வாதிக்கும், வாதியின் மைத்துனர் சோலைக்கும் விவசாய நிலங்கள் உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

14) நான் வாதியிடம் 29.12.2019ம் தேதி ரூ.10,00,000/- கடனாக பெற்றேன் என்றாலும், அதற்காக வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி கொடுத்தேன் என்றாலும், தற்சமயம் வாதியை மோசடி செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

15) வா.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது அல்ல என்பதை நிரூபிக்க கைரேகை நிபுணருக்கு அனுப்பி வைக்க நான் தயாராக உள்ளேன்.

16) நான் அனுப்பிய பதிலறிவிப்பில் பிராமிசரி நோட்டில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது அல்ல என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல.

17) நான் பிராதில் கண்டுள்ளபடி வாதிக்கு தொகையை திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை - இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதன்மை மாவட்ட நீதிபதி,
புதுக்கோட்டை.